தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) &
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-7-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இரண்டு நாள் புத்தாக்கப் பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அமைச்சுப் பணி அலுவலர்களுக்கு அலுவலக மேலாண்மை பற்றிய இரண்டு நாள் பயிற்சி சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்தாரால் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் இயக்குநர் (திட்டமிடல் மற்றும் மேற்பார்வை) முனைவர் எம். சந்திரசேகரன் அவர்கள் வரவேற்புரையும், பயிற்சி ஒருங்கிணைப்பாளர் திரு.எம்.ஆர். ஜெகநாதன் அவர்கள் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் மண்டல பயிற்சி நிலையங்கள் நடத்தும் பயிற்சிகளையும் அதன் பலன்களையும் எடுத்துக் கூறினார். மேலும், அண்ணா பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் 57 பேர் இந்த வருடம் குடிமைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள் என்ற விவரத்தினையும் கூறினார்.

பயிற்சியினைத் தொடக்கி வைத்து பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் கூறியதாவது, பயிற்சியின் காரணமாக ஏற்படும் பல்வேறு பலன்களையும் பயிற்சிக்கு வயது ஒரு தடை இல்லை என்றும், அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் இத்தகைய புது முயற்சிகளை முழு மனதோடு வரவேற்பதாக கூறி பயிற்சியினை மிக நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

பயிற்சியின் முதல் நாள் திரு. ஆர். இரங்கநாதன் அவர்களும், இரண்டாம் நாள் திரு. ஆர்.ஜே. சேவியர் அவர்களும் பயிற்சியினை திறம்பட நடத்தவுள்ளார்கள்.

இறுதியாக, பல்கலைக்கழக ஆராயச்சி இயக்குநர், முனைவர் எம். மகேஸ்வரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்